REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 32உ திங்கள் (16—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆவணி மீ 1உ செவ்வாய் (17—8—54) | இதழ்: 54

விடுதலை வீரர்களின் 'வெற்றி நடை'!

400 வருட ஆதிக்கத்திற்கு எதிராகப் போர்ப்பரணி!

அறப்போர் ஆரம்பமாயிற்று!

மக்கள் தலைவர்களை நாடு கடத்திய ஆதிபத்தியம் திகைக்கிறது!

90 தொண்டர்கள் கைது!

விடுதலை கீதம் கேட்டு வெறிச் செயலில் இறங்கிய வீணர்கள்!

'ஏகாதிபத்தியமே! வெளியே போ!' என்ற முழக்கம்!

வழி தேடி வந்த கூட்டம் வம்பு செய்யும் கொடுமை!

400 ஆண்டுகளாக இந்தியாவில் ஆதிக்கம் செலுத்திவரும் போர்ச்சுகீசியர்கள் ஆதிக்கத்தை எதிர்த்து, 'மக்கள் சக்தி' போர் நடத்தத் துவங்கி விட்டது.

பாய்மரக் கப்பலில் திக்கு தெரியாது தவித்து, இந்தியக் கடற்கரையில் காலடி எடுத்துவைத்த போர்ச்சுகீசியர்கள், புனிதவான்கள் போன்று நடித்து, நாட்டிலே தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

வாழ வழியும், வாணிபத்திற்கு இடமும் தேடிவந்த வெள்ளையர் கூட்டம் சிறிது சிறிதாக நாடு தன்னுடையது என்று உரிமை கொண்டாடியது. உலகில் பல நாடுகளின் காலனி ஆதிக்கம் மறையத் துவங்கியது கண்டும் போர்ச்சுகல் ஏகாதிபத்திய வெறியர்கள், நாட்டை அதன் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்க மறுத்து வெறிச் செயல்களில் இறங்கினார்கள்! மக்கள் தலைவர்களை நாடு கடத்தினார்கள்!! மக்கள் 'விடுதலை கீதம்' பாடி விழித்தெழுந்தார்கள்!!!

'ஏகாதிபத்தியம் ஒழிக' என்ற குரலுடன், 'போர்ச்சுகீசியர்களே! வெளியேறுங்கள்!' என்ற முழக்கம், கோவா, டையூ, டாமன் போன்ற பகுதிகளில் சென்ற சில ஆண்டுகளாகக் கேட்கத் துவங்கியது.

லிஸ்பன் சர்க்கார், விடுதலை கீதம் பாடிய மக்கள்மீது அடக்குமுறையை ஏவியது! மக்கள் தலைவர்களை நாடு கடத்தியது!!

இந்திய உபகண்டத்து மண்ணிலே ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதுமன்றி, புதுடில்லியை நோக்கி கடு சொற்களையும் வீசியது! 'வெளியேற மாட்டேன்' என்று கொக்கரித்தது!!

ஆகஸ்டு 15-ந் தேதியன்று 'விடுதலைப் படை' கோவா மண்ணை நோக்கிப் புறப்பட்டுவிட்டது! 'அன்னியனே! வெளியேறு!', 'கோவாவை விட்டு வெளியேறு' என்ற முழக்கங்களுடன் 48 கோவானியத் தொண்டர்கள் மாஜாலி, தேரகோல், ஆகிய இடங்களில் பிரவேசித்தனர்.

பெல்காம், ஆக. 15— கோவாவிற்கு வட கோடியில் உள்ள தேரகோல் கோட்டையை, பெல்காமிலிருந்து ஆல்பிரட் அல்பான்சோ தலைமையில் சென்ற அறப்போர் வீரர்கள் பிற்பகல் 1-30 மணிக்குப் பிடித்து இந்தியக் கொடியை ஏற்றினர் என்று தெரிகிறது.

பின்னர் போர்ச்சுகீசிய போலீசார் கொடியை இறக்கி தொண்டர்களைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

தொண்டர்கள் அனைவரும் தூய வெள்ளை நிற ஆடை உடுத்தியிருந்தனர்.

தேரகோலில் 15 பேர் கொண்ட குழு இன்று காலை 11-மணிக்கு முன்னமே நுழைந்தனர். இவர்கள், திலகர் பிறந்த ஊரான ரத்னகிரியிலிருந்து புறப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுவினரை 3 000-க்கு மேற்பட்ட மக்கள் வழியனுப்பினர்.

தேரகோலில் உள்ள சர்க்கார் அதிகாரிகள், இந்தியக் கொடியைக் கண்டதும் அதற்கு வணக்கம் செலுத்தினர். இவர்கள் அறப்போர் தொண்டர்களை நல்ல முறையில் நடத்தினர் என்று தெரிகிறது.

மாஜாலி எல்லையில், தெற்கிலிருந்து வந்த படையினர் நுழைந்தனர்; போலீசாரின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தொண்டர்கள் உள்ளே நுழைந்துவிட்டனர்.

அறப்போர் தொண்டர்களுடன் சென்ற இந்திய நிருபர்கள் இந்திய எல்லையிலேயே நின்றுவிட்டனர்.

ஸ்வந்த்வாடி பக்கத்தில், பண்டாவிலிருந்து படையெடுத்த மார்க்பெர்னாண்டஸ் குழுவினர் பாத்ரா தேவி என்கிற சிறு கிராமத்தைப் பிடித்துவிட்டனர் என்று தெரிகிறது.

இறுதி நாள்!

கோவா தேசிய காங்கிரசின் தலைவர் பீட்டர் ஆல்வாரிஸ்,

(4-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரத் தின 'திருவிளையாடல்!'

—— (:) ——

கடைகள் கொளுத்தப்பட்டன; வீடுகள் தாக்கப்பட்டன!

போலீசார் தடியடிப் பிரயோகம்: 100-பேருக்குப் படுகாயம்!

செகந்தராபாத், ஆக. 15— நகரத்தில் உள்ள காந்தி பார் சிலையருகே யாரோ சிலர் பாகிஸ்தான் தேசியக் கொடியை ஏற்றிவைத்திருந்தனராம்.

சுதந்திர தின விழாவை ஒட்டி, காங்கிரஸ் தலைவர்களும், தோழர்களும் கொடி ஏற்றுவதற்காக, சிலையருகே இருந்த அந்த மைதானத்தில் பாகிஸ்தான் கொடி பறந்து கொண்டிருந்ததைக் கண்டு திடுக்குற்றனராம்! கூடியிருந்த காங்கிரசார் கோபத்தால் சீறினர்; கூட்டம் குழப்பியது! ஆனால் மாவட்ட போலீஸ் அதிகாரி, அமைதிப்படுத்தி, பாக். கொடியை இறக்கி விட்டு, காங்கிரஸ் கொடியை ஏற்றுவிக்கத் துணை புரிந்தாராம்!

சுதந்திர தின விழாவின் கொடியேற்றும் வைபவம் அப்படி நடைபெற்று இனிதே முடிந்ததாம்.

ஆனால், காலை சுமார் 10-30 மணிக்கு 'பார்கட்பூரா' எனும் இடத்தில் கூடியிருந்த ஒரு பெருங்கூட்டம் வீடுகளை கற்களால் தாக்கவும், கடைகளைக் கொள்ளையிடவுமான செயல்களில் திடீரென ஈடுபட்டதாம்!

அதன் விளைவாக இருபதுக்கும் அதிகமான கடைகள் கொளுத்தப்பட்டன; ஏராளமான வீடுகள் தாக்கப்பட்டன.

எரிந்த கடைகளில் ஒரே ஒரு பெரிய ஓட்டலைத் தவிர, மற்ற பிற எல்லாம் சிறிய வெற்றிலை பாக்குக் கடைகளும், பழக் கடைகளும்தான் என்றும் செய்திகள் கூறுகின்றன.

போலீசார், அந்தக் கூட்டத்தினர் மேலும் நாசம் விளைவிக்காதவாறு தடுப்பதற்காக தடியடிப் பிரயோகம் செய்தனராம். 100-க்கும் அதிகமான பேர்கள் காயமடைந்து அட்டிருக்கின்றனர்; சுமார் 70 பேருக்கு பலத்த காயங்களாம்!

போலீசாரின் தடியடிப் பிரயோகத்தையும், கல்மாரி பொழிந்து கொண்டே வரவேற்றனராம் அந்தக் கோபங்கொண்ட கூட்டத்தினர்!

மாவட்ட கலெக்டர், மாநில போலீஸ் அதிகாரி ஆகியோர் சம்பவம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்ட பின்னர், குலைக்கப்பட்ட நகரத்தின் அனுமதி மீண்டும் நிலைநாட்டப்பட்டு விட்டதாக அவர்களில் ஒருவர் கூறினர்.

அடிபட்டவர்கள் யாவருக்கும் மருத்துவ சிகிச்சை தரப்பட்டது. அவர்களில் யாருடைய உயிருக்கும் அபாயமேதும் இல்லை எனச் செய்திகள் வந்துள்ளன.

சீனாவில் அட்லி!

சௌ-யென்-லாயுடன் விருந்து!

பீகிங், ஆக. 15— பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் அட்லி தனது எழு சகாக்களுடன், லண்டனிலிருந்து மாஸ்கோ வழியாக சீனத் தலைநகரான பீகிங்கிற்கு வந்து சேர்ந்தார்.

சீனாவிற்கு வருகை தந்துள்ள இந்த பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தூதுக் குழுவிற்கு சீன மக்கள் வெளி விவகாரக் கழகத்தின் தலைவரான சியாங்-ஷி-ஜோ, விருந்தொன்று தரப்பட்டது.

இந்த விருந்தில், சீனப் பிரதமர் சௌ-யென்-லாய், உதவிப் பிரதமர்கள் சே-மோ-ஜோ ஹாங்-என்-பெய், இன்னும் பீகிங் நகர மேயர் ஆகியோர் விருந்தில் கலந்து கொண்டனர்.

உரையாடல்......!

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் அட்லி, சீனப் பிரதமர் சௌ-யென்-லாயுடன் இன்று சுமார் 5 மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தார் எனத் தெரிகிறது. மேற்கு நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்வது பற்றியும், ஆங்கிலோ-சீன உறவுகள் பற்றியும், சீனாவின் அரசியல் சட்டம் குறித்தும் பேச்சுக்கள் அவர்களிடையே நடைபெற்றன என்றும் தெரிகிறது.

* * *

சீனா, லண்டனுக்கு தூதுவரை அனுப்பும்

சம்பூர்ண சீன சர்க்கார் பிரிட்டனுக்கு தூதுவரை அனுப்ப முடிவு செய்திருக்கிறது.

சமரசம் செய்ய எகிப்து முயலவு!

கெய்ரோ, ஆக. 14— இந்தியா, போர்ச்சுக்கல் ஆகிய இரு நாடுகளுக்கிடையே காலனி பிரச்சினையில் சமரசம் செய்ய எகிப்து முயற்சி செய்கிறதாம்!

இரு நாடுகளுக்கும் நண்பன் என்ற முறையில், எகிப்து வெளிநாட்டமைச்சர், இந்திய, போர்ச்சுக்கல் தூதுவர்களை சந்தித்துப் பேசினர் என்று தெரிகிறது.

மேற்கு கொண்ட விபரங்கள் பின்னர்தான் தெரியுமாம்.

★

இந்தியா குறிப்பு

'தெளிவற்று இருக்கிறதாம்!"

லிஸ்பன், ஆக. 15— கோவா பற்றி ஆக. 13-ந் தேதியன்று இந்திய சர்க்கார் அனுப்பியிருந்த குறிப்பு முன்பு அனுப்பப்பட்டதைப் போலவே, குழப்பமாகவும், தெளிவற்றும் அடிப்படைப் பிரச்சினைகளை சரியான முறையில் உணர்ந்து கொள்ளாத நிலையிலும் உள்ளது என்று லிஸ்பன் சர்க்கார் தெரிவித்தது.

✡

'கவர்னர் ஜெனரலிடம் அழைத்துப் போ!'

மாஜாலியில் போலீசார், 21 தொண்டர்களைத் தடுத்து 'எங்கே போகவேண்டும்' என்று கேட்டனர். தொண்டர்கள் 'கவர்னர் – ஜெனரலிடம்!' என்று பதில் அளித்தனர்.

கொடியை அகற்றும் கொடியவர்கள்

(நம் சிறப்பு செய்தி)

காட்டுமன்னார்கோவில், கடைத் தெருவில், ஏற்றிவைக்கப்பட்டிருந்த, திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை யாரோ சில கொடியவர்கள் கொடி மரத்துடன் வெட்டி வீழ்த்திவிட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது. அந்தக் கொள்ளையர் 'அரசியல் கொள்ளையராகத்' தான் இருக்கக்கூடும் எனவும் சொல்லப்படுகிறது. (நம்.)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 16—8—54 திங்கள்

'சுதந்திர' சர்க்கார்!

பல நகரங்களில் சுதந்திரத் தின விழாக்கள் இன்னும் முடியவில்லை; தொடர்ந்து நடைபெறுகிறது!

ஆங்கில ஏகாதிபத்தியம் ஒழிந்ததே என்ற மகிழ்ச்சியில் திளைத்து, அந்த மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்த விடுதலை வீரர்களுக்கு வணக்கம் செலுத்தி, தங்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டனர், நாட்டுப் பற்றுடை யோர்!

ஆனால், அதே நேரத்தில், ஏழாண்டுகளுக்குமுன் வெள்ளையனிடமிருந்து இந்திய உபகண்டத்தை ஆளும் உரிமையைப் பெற்ற காங்கிரஸ்காரர்கள், தங்கள் சாதனைகளைப் பற்றி பறைசாற்ற இதை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டனர்!

நாட்டு விடுதலை கோரி, செக்கிழுத்து, சாக்காட்டை நல்கிய சிதம்பரத்தைப் பற்றியும், குண்டாந்தடியடிபட்ட குமரனைப் பற்றியும், அவர்களை அந்த அளவு தியாகம் புரியச் செய்த விடுதலை வேட்கையின் மேன்மை பற்றியும் கூறுவதை விட்டு, 'இந்த ஏழாண்டுகளில் நாங்கள் சாதித்தது காணீர்' என்று தங்கள் கணக்கை விரிக்கின்றனர்!

கடமையை மறந்து, சுய விளம்பரத்தில் நுழைந்துவிட்டார்களே என்றுகூட கவலைப்படவில்லை; ஆனால், இந்த சுய விளம்பரமும் எவ்வளவு பரிதாபகரமான காட்சியளிக்கிறது; எந்த அளவு பயங்கரமான உண்மையை விளக்குகிறது என்பதுதான் கவனிக்கப்பட வேண்டியது!

வெள்ளையன் இந்த நாட்டை விட்டு ஏழாண்டுகளுக்குமுன் வெளியேறியபோது இருந்த நிலைக்கும் இன்று இருக்கும் நிலைக்கும் என்ன மாறுதல் தெரிகிறது?

வாழ்க்கை நிலை உயர்ந்ததா? வறுமையும், அறியாமையும் போக என்னென்ன செய்திருக்கிறார்கள்?

மக்கள் உடல்நலன் குறித்து கொண்டுவரப்பட்ட திட்டங்கள் எவ்வளவு?

இவைகளை யெல்லாம்விட நாட்டிலே இருக்கும் உயர்வு—தாழ்வு போக, பாட்டாளி—முதலாளி வர்க்கபேதங்கள் எந்த அளவுக்கு நீக்கப்பட்டன?

சமுதாய அன்றாட வாழ்க்கையில் இவைகள் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

இன்னும் கவனிக்கப் போனால், வெள்ளையன் ஆட்சியைவிட மிக மோசமான ஆட்சியின்கீழ் இருப்பதுதான் தெரியும்.

பிரிட்டிஷ் ஆட்சியைவிட நிறைவான குறைவான அரசாங்க அமைப்பும், வஞ்சம் மலிந்துபோன அரசாங்கமும் தான், தேசியத் தோழர்கள், அதிகாரத்தில் அமர்ந்ததில் ஏற்பட்ட பலன்!

மந்திரிகளாக அமர்ந்தவர்கள், ஜனநாயகத்தை ஊறு செய்யும் வகையில், அடக்குமுறை பாணங்களை வீசி, மாற்றுக் கட்சிகளை அடக்குவதிலும், ஊருக்கு உழைப்பவர்களை ஒழித்துக்கட்டி, தாங்களே என்றுமிருக்கும் வகையில் சர்வாதிகாரப் பாதையில் செல்லவே முயன்று வருகின்றனர்!

வெள்ளையன் ஒழிந்த பிறகு, பொருளாதாரத் துறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்து, இந்திய உபகண்டத்திற்கு ஏற்றத் திட்டங்களை கொண்டுவர காங்கிரஸ் ஆட்சி முயலவில்லை. முதலாளி—தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவினையை ஒடுக்க மறுத்து, பிற்போக்கான அரசியல் பாதையிலே சென்ற காரணத்தால்தான், 'இந்த நாட்டை விட்டுப் போகிறேன்,' என்று கூறிச் சென்ற ஆங்கிலேயன், வியாபாரம் மூலமாக இன்னும் இங்கே ஆதிக்கம் செலுத்த முடிகிறது. ஆங்கிலேயன் கூடவே, அமெரிக்கனும் தன் முதலாளித்துவத் திட்டங்களின் இந்த நாட்டை இழுத்துக் கொள்ள முடிகிறது!

பிரிட்டிஷ் ராஜ்யம் சேர்த்து வைத்துப் போன இரண்டாயிரம் கோடி ரூபாய்களை வைத்துக்கொண்டு போட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே மூன்றாண்டுகள் ஓடிவிட்டன. பணம் பாதிக்கு மேல் செலவாகிவிட்டது; இருந்தும் நம் நாட்டிலே எந்த அளவு மாறுதலும் காணோம். கேட்டால், தாமோதர் பள்ளத் தாக்கையும், பக்ரா—நங்கல் கால்வாயையும் காட்டுகின்றனர். வடநாட்டிலே இவர்கள் செய்யும் சாதனைகளைக் கண்டு நாம் திருப்தியடைய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

'நான் சாப்பிடுகிறேன்; நீ பார்த்துக் கொண்டிரு,' என்று, சாப்பாட்டுக்குரியவன் பட்டினியோடு இருக்கும் போது, இச்சகம் பேசித் திரிபவன் கூறினால் எப்படி இருக்கும்?

இரண்டாயிரம் கோடி ரூபாய் திட்டத்தில், சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது சுமார் நூறு கோடி ரூபாய்களாம்! இதிலே, பாதிக்கு மேல் முன்பே செலவாகிவிட்டதாம்! இதுதான் ஏழாண்டு ஆட்சிக்குப் பிறகு டில்லி சர்க்கார் கொடுக்கும் பொருளாதாரத் திட்டம்!

சமுதாயத் துறையிலோ, வெள்ளையன் காலத்தைவிட மிக மோசமான நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது, நாடு!

ஆங்கிலேயன் மிக உயர்ந்த கலாச்சாரத்தின் பிரதிநிதி; ஆகவே, அவன் ஆதிக்கத்தில், அறிவினோடு, அறிவும் வளர்ந்தது!

டில்லியில் ஆளப்புகுந்தவர்களோ, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இரட்டை நாக்கினர்! விடுதலையடைந்த இந்தியாவில், 'மக்கள் எல்லோரையும் ஒன்றாக பாவித்து, ஜாதி, சமயப் பூசல்களை ஒழித்து, ஒன்றுபட்ட சமுதாயத்திற்கு ஏற்ற சட்டதிருத்தங்களை செய்யவில்லை. மிகச் சாதாரண இந்து சட்ட சீர்திருத்த மசோதா ஏழாண்டுகளாக ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

விஞ்ஞான வழி பேசும் நேரு பண்டிதர், கும்பமேளாவுக்கும் போன காட்சி, டெல்லி சர்க்காரின் சமுதாய வழியை நன்கு விளக்கும், மூடப் பழக்க வழக்கத்தால் அறியாமையில் ஆழ்ந்த மக்கள் பல தவறு வழிகளில் செல்கின்றனர். நாட்டின் தலைவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள் இந்த மக்களை அறிவுப் பாதையில் எப்படித் திருப்பி அழைத்து வருவது என்று சிந்திப்பதைவிடுத்து, அவர்களிடம் எப்படி புகழுரை வாங்குவது என்பதிலேயே தங்கள் எண்ணத்தை செலவிட்டனர்.

உலகத்திலே இல்லாதவிதமான தீண்டாமைக் கொள்கை இந்த நாட்டு மதச் சம்பிரதாயத்திலே அமிழ்ந்து கிடக்கிறது. இதை ஒழிக்க அரசியலமைப்பிலே ஒரு விதி ஏற்படுத்திவிட்டால் போதுமென்று எண்ணினர் டெல்லி சர்க்கார்.

'இவ்வளவுதானா?'—என்று கூறிவிடாதீர்கள்; சென்னை ராஜ்யத்திலே தீண்டாமை ஒழிப்புக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதாம், டெல்லி சர்க்கார்; இங்கே இருக்கும் புத்திசாலிகள் அந்தப் பணத்தில் இரண்டு லட்ச ரூபாயை எப்படி செலவு செய்திருக்கிறார்கள் தெரியுமோ! சுமார் ஐந்நூறு பிரசங்க மேடைகள் கட்டியிருக்கின்றனர்! எதற்கு? யாருக்குமே தெரியாது!

பிரசங்க மேடைகளில் தீண்டாதவர்கள் வருவார்களாம்; மற்றவர்களும் வருவார்களாம்! ஆகவே இருவர்களுக்குள்ளும் தொடர்பு ஏற்பட்டு, ஒற்றுமை உண்டாகி, தீண்டாமை ஒழியுமாம்! என்ன விசித்திரமான யோசனை!

கொசுக்களின் தலையிலே வெண்ணை வைத்து பிடிப்பது போல், மக்கள் மனதிலே ஏற்பட்டிருக்கும் தவறான மத மனப்பான்மையை மாற்றுவதற்கு, அதற்கான சீர்திருத்த செயல்களில் ஈடுபடுவதை விட்டு, மேடை கட்டினார்களாம். மேடை! இப்படித்தான் ஒவ்வொரு சீர்திருத்தமும் நாட்டிலே நடைபெறுகிறது!

உள்நாட்டு விவரங்களில் எல்லாத் துறைகளிலும், வெள்ளையனிடமிருந்து பொறுப்பேற்றவர்கள், தாங்கள் பொறுப்பேற்ற அளவு தகுதியோடு நடந்து கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்திலே வடவர் பார்த்து பெருமைப்படும் வண்ணம் காரியங்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

திராவிடத்தின் வளம் குன்றுகிறது. திராவிடன் மலேயாவில், பர்மாவில் பிழைப்புக்கு உயிர்விட்டுக் கொண்டிருக்கிறான்; இலங்கையிலிருந்து துரத்தப்படுகிறான்; ஆப்பிரிக்காவில் அவதூறுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறான்; கேட்பாரில்லை! ஏனென்றால், டெல்லியிலிருப்பவர்களுடைய பிரச்னையல்ல அது!

சுதந்திரம் வந்து ஏழாண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் திராவிடத்தைக் கசக்கிப் பிழிந்த ஒரு அரக்கன் ஒழிந்தான் என்ற களிப்பு வருகிறதே தவிர, மற்றொரு ஆதிக்கத்தின் பிடி அதிகமாவது நன்கு தெரிகிறது.

விரைவில் அதை உடைத்தெறிய, திராவிடர் படை திரளட்டும்!

ஆகஸ்டு 15-ஆங்கில ஆதிக்கம் தீர்ந்த நாளாக மட்டும் இருக்கவேண்டாம்; வடவர் ஆதிக்கம் அழிந்த நாளாகவும் மாறட்டும்!

பிரிவினை முழக்கம்-நேருவின் கலக்கம்

சமுதாய விடுதலை—அவர் தரும் விளக்கம்

இந்தியாவில் ஒற்றுமை இல்லை என ஒப்பம்

அ. இ. பத்திரிகையாளர் மாநாட்டில் பண்டிதர் ஓலம்!

"இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள், நடைமுறை விதிகள், மதச்சார்பற்ற தன்மை, எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் ஆகிய அம்சங்கள் நல்ல இடம் பெற்றுள்ளன. இவைகளை எல்லாம் மக்களிடையே வலியுறுத்தி எடுத்துச் சொல்லுவதை விடுத்து பத்திரிகைகளின் ஒரு பகுதி, மக்களிடை பிரிவினை மனப்போக்கையும், பிளவு மனப்பான்மையையும் ஆதரித்து வலியுறுத்தி வருகின்றன. மாநிலப் பிரிவினை, மொழிவழி அமைப்பு, வகுப்புவாரிப் பிரிவினை ஆகிய தோற்றங்களில் அந்தப் பிரிவினை மனப்போக்கு, ஒரு பகுதி பத்திரிகைகளால் வலியுறுத்தப்படுகின்றன. இந்தப் பிரிவினை மனப்போக்கை வலியுறுத்துவதை, அரசியல் சட்டத்திலுள்ள, எண்ணுவதற்கும், எண்ணியதை எடுத்துச் சொல்லுவதற்கும் உள்ள உரிமைகளை வளர்ப்பதாக பத்திரிகாசிரியர்கள் எண்ணுகின்றனரா?"

"நாட்டைப் பலவீனப்படுத்தி, மக்களிடையே ஒற்றுமை வளர்வதைத் தடுக்கிற சில அம்சங்களை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன் இந்தியாவில் அரசியல் 'ஒற்றுமை' மட்டும் இருந்தால் போதாது; இன்னும் பலமான ஒரு ஒற்றுமை தேவை. உதாரணமாக, மக்களிடையே, உள்ள உணர்வு பூர்வமான ஒற்றுமை இருக்க வேண்டும்."

"குறுகிய சாதிய எண்ணங்களை ஒழிப்பதற்கு நாம் பத்திரிகைகளைப் பயன்படுத்துவதில் இதுவரை தீவிரமான எண்ணம் கொள்ளவில்லை; நாம் எப்பொழுதோ இதைச் செய்ய முன்வந்திருக்க வேண்டும். இது பற்றி நாம் அதிகமாகக்கூடப் பேசுவதில்லை; தேர்தலில் தோற்றுவிடுவோமோ என்ற அச்சத்தில்!"

—இவ்வாறு, இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதம மந்திரி பண்டித ஜவகர்லால் நேரு அகில இந்தியப் பத்திரிகாசிரியர்களின் 11-வது மாநாட்டைத் துவக்கி வைக்கும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

"சர்க்காரின் நடவடிக்கைகளைப் பத்திரிகைகள் விமர்சிப்பதையோ, கண்டிப்பதையோ நான் தடுக்க விரும்பவில்லை சிலர், பத்திரிகைகளுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்துப் பேசுகின்றனர். உள்ள உணர்வுபூர்வமான அபிப்பிராயங்களை வெளியிடுவதில் சிறிய கட்டுப்பாட்டையும் விதிப்பதில் எனக்கு விருப்பமில்லை எடுத்துச் சொல்லும் உரிமை என்பது, பிரச்சினைகளை அருவருக்கத்தக்க முறையில் அணுகுவதும், அநாகரீக முறையில் எடுத்துச் சொல்வதையும் உள்ளடக்கியதல்ல."

பண்டிதர் தொடர்ந்து கூறியதாவது:—

பலர் அரசியல் சுதந்திரம் பற்றியே பேசிப் பழக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் எல்லாம் இப்போது சமுதாய விடுதலை குறித்தும் பேச வேண்டும்.

சமுதாய விடுதலை இல்லாவிடில், அரசியல் சுதந்திரமோ, பொருளாதார சுதந்திரமோ இருக்க முடியாது.

ஒரு நாடு உண்மையிலேயே முன்னேறியிருக்கிறது, அல்லது, ஒரு புரட்சிகரமான மாறுதலைச் சந்தித்திருக்கிறது என்ற சோதனை அந்த நாட்டில் ஏற்படுகிற அரசியல் மாற்றம் எனும் கருவி கொண்டு கணக்கிட முடியாது.

மாறாக, அந்த நாட்டில் உள்ள சாதாரண மக்களிடையே ஏற்படுகிற மாற்றத்தால்தான் முடியும்.

மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உள்ள உறவுகளிலும், மக்களுடைய சமூக, பொருளாதார அமைப்பிலும் ஏற்படும் மாறுதல்களும்தான் சாதாரண மக்களிடையே அந்த மாறுதலை உண்டுபண்ண முடியும்.

இந்தியாவில் சமுதாய மாற்றம் மிக மெதுவாக நடைபெறுகிறதென்பதை யாரும் உணர முடியும்."

இந்த சமுதாய மாற்றத்தைத் துரிதப்படுத்த பத்திரிகைகள் முன்வர வேண்டுமென்றும், தீண்டாமை அரசியல் சட்டத்தின் மூலம் தடைப்படுத்தப்பட்டிருந்தும், இன்னமும் அக்கொடுமை நாட்டில் பல்வேறு ருவங்களில் நிலவி வருகிறதென்றும், அவை எல்லாம் ஒழிய வேண்டும் என்றும், ஆண்களைப்போலவே பெண்களும் பொதுவாழ்வில் ஈடுபட முன்வர வேண்டுவது அவசியமெனவும், இந்தியாவில் ஏற்பட்டுவரும் மகத்தான 'மாற்றங்களையும்' அரசாங்கத்தின் மாபெரும் 'சாதனை'களையும் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டியது பத்திரிகைகளின் பொறுப்பு என்றும் பண்டிதர் குறிப்பிட்டார்.

கழகச் செய்திகள்

அரக்கோணம் தி. மு. க.

8—8—54 மாலை 7 மணிக்கு கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் நடராசனின் தலைமையில் கூடி, மணப்பாறை தோழர் குமாரவேல் மறைவுக்கு அநுதாபம் தெரிவித்தும், அரக்கோணத்தில் பொதுக்கூட்டம் நடத்த நகர மத்தியில் ஒரு வசதியான இடத்தை ஒதுக்கித் தருமாறு பஞ்சாயத்து போர்டாரையும், நிர்வாக அதிகாரியையும் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முல்லைவாடி தி. மு. க.

12—8—54 இரவு 9 மணிக்கு ஆத்தூர் வட்ட முல்லைவாடி தி.மு. கழக உறுப்பினர் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : இரா. வெங்கட்டராமன் ; துணைச் செயலாளர் : ப. ஆறுமுகம் ; பொருளாளர் : வி. சௌந்திரபாண்டியன் ; மாவட்டப் பிரதிநிதி : பி. வி. கிருட்டிணன் ; மற்றும், 11 பேர்கள் கொண்ட செயற் குழுவும் அமைக்கப்பட்டது. விரைவில், கழகத் திறப்பு விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

மயிலாங்கம் தி. மு. க.

10—8—54 காலை 9 மணி அளவில் கழகக் கட்டிடத்தில் தோழர் கே. திருமலைசாமி தலைமையில் செயற் குழு கூட்டம் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : ஏ. பால சுப்பிரமணியம் ; துணைச் செயலாளர் : என். குப்பமுத்து ; மாவட்டப் பிரதிநிதி : என் சுப்பராயன் ; விளம்பர உறுப்பினர் : ஆர். பிச்சைமுத்து ; பொருளாளர் : ஏ. பெரியசாமி ; மற்றும் இருபது பேர் கொண்ட செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சீர்காழி தி. மு. கழகம்

6—8—54 மாலை 6-30 மணியளவுக்கு தமிழ்நாடு ஒலிபெருக்கி நிலையத்தில் தோழர் என். ராமசாமி தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : என். ராமசாமி ; துணைச் செயலாளர் : டி. என். ராமு ; பொருளாளர் : ஆர். சண்முகம் ; விளம்பர உறுப்பினர் : டி. எஸ். பாண்டியன் ; செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. குருசாமி, விகன்னுரி, என். ஒளி, ஏ. அறவாழி, எம். சம்பந்தம், கே. அசப்பிட்டு, ஆர். தட்சிணாமூர்த்தி.

செப்டம்பர் மூன்றாவது வாரத்தில் கழக ஆறாவது ஆண்டு விழாவை நடத்துவதென முடிவு செய்யப்பட்டதுடன், பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஓர் இடவசதி செய்து கொடுக்கும்படி நகராண்மைக் கழகத்தினரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

தலையாமங்கலத்தில் தி. மு. க. துவக்க விழா

6—8—54 இரவு 7 மணிக்கு தலையாமங்கலம் பள்ளிக்கூடத்திற் கருகில், தி. மு. க. துவக்க விழா, மன்னார்குடி தோழர் ப. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மன்னை சந்திரசேகன், திருக்களர் சிவபுண்ணியம் இன்னிசை விருந்தளித்தனர். தலைவர் முன்னுரையில், இயக்கக் கொள்கைகளை விளக்கியபின், தோழர் சி. பி சிற்றரசு அவர்கள் 2 மணிநேரம் சிறிவுரையாற்றினார்.

மூணார் தி. மு. கழகம்

8—8—54 இரவு 8 மணிக்கு செயற் குழு கூட்டம் தோழர் பொ. சோமு தலைமையில் நடைபெற்றபோது, கழக வளர்ச்சிக்காக நிதிதிரட்டக் குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தும், 22—8—54ல் மூணாரில் பொதுக்கூட்டம் நடத்தத் தீர்மானித்தும், மற்றும் முக்கிய தீர்மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டன.

பொட்டனேரி தி. மு. க.

9—8—54-ல், கழகக் கட்டிடத்தில் தோழர் கே. எஸ். மாணிக்கம் தலைமையில் கமிட்டி கூட்டம் நடைபெற்றபோது, சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

பெரியகுப்பம் தி. மு. க.

8—8—54 மாலை 6 மணிக்கு கழகச் சார்பில் தோழர் பெ. கெ. ஜெ. நாதன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பொ. நாராயணன், தி. ரா. வரதன் ஆகியோர் பேசிய பின்னர் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் "தற்கால அரசியலில் உள்ள மக்கள் நிலை" என்பது பற்றி விளக்கிப் பேசினார். பின்னர், பெரியகுப்பம் போலிமேட்டில் தண்ணீர் வசதி இல்லாததால் குடிதண்ணீர் குழாய் போட்டுக் கொடுக்கும்படியும் இவ்வூரில் உள்ள வைத்தியசாலையை பிரதினம் திறக்கும்படி ஏற்பாடு செய்யும்படியும் நகராட்சி சபையைக் கேட்டுக்கொண்டும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இலங்கை-பூசலாவ கிளை தி. மு. கழகம்

கழகத் தேர்தல் கூட்டம் தோழர் என். கதிரவன் தலைமையிலும், தோழர் செல்லமுத்து முன்னிலையிலும் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : இரா. மணவழகன் ; துணைச் செயலாளர். ஆ. இராமச்சந்திரன் ; விளம்பர உறுப்பினர் : வீ. கருப்பையா ; பொருளாளர். எஸ். நாகரத்தினம் ; பொதுக்குழு பிரதிநிதி : செல்லமுத்து ; செயற்குழு உறுப்பினர்கள் : தோழர்கள் சங்கரன், லத்திபு, குழந்தைவேலு, மருதன், கிருட்டிணன், இராமசாமி, ஆர். வி. அரசன்.

தோழர்கள் செல்லமுத்து, நாகரத்தினம், மணவழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மணிநகர் — ஆமதாபாத் தி. மு. கழகம்

8—8—54ல், 2-வது வட்ட உறுப்பினர் கூட்டம் தோழர் மு. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ச. சம்பத்குமார், நா. தேவராசு, பொ. ரத்தினவேல், பொ. வைத்தியநாதன், இரா. வைத்திலிங்கம் ஆகியோர் கழக வளர்ச்சி பற்றியும், உறுப்பினர்கள் கடமை பற்றியும் பேசினர். பின்னர் நிர்வாகக் குழு மாற்றியமைக்கப்பட்டது :—செயலாளர் : ச. கணேசன் ; துணைச் செயலாளர் : சா. ஆறுமுகம் ; பொருட்காப்பாளர் : கு. முத்துகுமாரசாமி ; செயற்குழு உறுப்பினர்கள் : என் சம்மந்தம், என். கந்தசாமி, அ. குப்புசாமி, மு கிருட்டிணன், ச. சம்பத்குமார், பு. சின்னசாமி, அ. சிதம்பரம் ; நகரக் குழு உறுப்பினர்கள். ஆர் கிருட்டிணன், வி கே. வேலன், ச ராமலிங்கம், அ குப்புசாமி, அ சிதம்பரம்.

பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

சின்னரெட்டிபட்டி தி.மு. கழகம்

8—8—54ல், கழக கூட்டம் தோழர் அ. குருசாமி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— பொறுப்பாளர் : மு. சின்னத்தம்பு ராஜம் ; செயலாளர் : ரா. பெருமாள் ; துணைச் செயலாளர் : அ. பெருமாள் ; பொருளாளர் : ச. ராம் ; துணைப் பொருளாளர் : அ. காளி ; மாவட்ட பிரதிநிதிகள் : அ. குருசாமி, ரா. சோலைமலை ; செயற்குழு உறுப்பினர்கள் : சுந்தரராஜ், தனுஷ்கோடி, அழகர்சாமி, முத்துச்சாமி, கொண்டு பெரிய கருப்பன், சுந்தரம், கருப்பையா, முத்துகிருஷ்ணன், பேச்சிமுத்து, அழகு, முத்துராமலிங்கம், ராமு, மாரியப்பன், ராமசாமி, வேம்புலு, ராமையா, சின்னவேலு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பெரியகுப்பம் தி. மு. க.

12—8—54 மாலை 4 மணிக்கு அண்ணா நிலையத்தில், தோழர் அ. பலராமன் தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. 8—8—54ல் நடந்த பொதுக்கூட்டத்தின் வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு, செலவுகள் போக மிகுதியை பொருள் காப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

கலை நிகழ்ச்சிகள்

திருத்துறைப்பூண்டி தாலுகா தி. மு கழகச் சார்பில், கலை நிகழ்ச்சி சுற்றுப் பயண விவரம் கீழே தரப்படுகிறது :—

4—8—54ல், பஞ்சநதிக்குளம் தி. மு க. கூட்டம் கிழக்கு சேத்தி மாரியம்மன் கோவில் திடலில் தோழர் பண்டரிநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் பேசினார். தோழர்கள் வ மோகன், ஜெகதீசன், பாக்கியநாதன் ஆகியோர் கலைநிகழ்ச்சி நடத்தினர்.

* * *

6—8—54ல், இடும்பாவனம் தி. மு க. சார்பில், தெற்கு வீதியில் தோழர் வடிவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி எஸ். கல்யாணசுந்தரம், வ. மோகன், சம்மந்தன் ஆகியோர் பேசினர். இரவு தோழர் வி எஸ். வாசன் குழுவினரால் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

* * *

7—8—54 அன்று முத்துப்பேட்டை தி. மு. க. ஆதரவில் ஏ. எஸ். என். திடலில் தோழர் ஆர். நடராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வ. மோகன், க. தருமலிங்கம் ஆகியோர் பேசினர். இரவு வாசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

* * *

8—8—54 அன்று கட்டிமேடு தி. மு. க. சார்பில் சின்னு விளையாட்டு மைதானத்தில் தோழர் டி. எஸ். கல்யாணசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. ஆர் எம். சுந்தரன், உத்திராபதி, வ. மோகன் ஆகியோர் பேசியபின் வாசன் குழுவினரால் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பெயர் சூட்டு விழா

8—8—54ல், ஆமத்தகர் தோழர் வி. நாயகம் அவர்களின் ஆண் மகவுக்கு 'பன்னீர் செல்வம்' என பெயர் சூட்டப்பட்டது அதுசமயம் நடந்த விழாவில் பல தோழர்கள் பங்கு கொண்டனர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப் பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

'உரிமை காக்க நாடுவோர், மக்களாட்சியில் நம்பிக்கை கொள்ள வேண்டும்."

சட்டம் அல்ல—நீதியா, நேர்மையா என்பதே கேள்வி

இளைஞர் படை தயாராகிறது!

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் பற்றி கண்மணியர்களின் கருத்துரை

ஐயா,

சென்ற உலக யுத்தத்திலும் சீரழிந்துபோன ஜெர்மன் நாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்காக முயற்சிகளை ஜெர்மன் மக்கள் மனம் விரும்பி செய்கின்றனர். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ஆக்கம் காணுவது அவர்களுடைய ஆசையாக இருக்கிறது.

ஜெர்மனியில் லென்ஜெண்டிபாக் என்ற நகரத்தின் நகராண்மைக் கழகத் தலைவர் ஹெர் என்ரிச் ருக் என்பவர் தனது சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன்வந்திருக்கிறார். சம்பளக் குறைப்புக்கு அவர் காட்டும் காரணம், அங்ககரின் தாழ்வான நிதி நிலைமையேயாகும். ஆனால், அவர் செய்யும் சிறந்த உழைப்பைக் கவனித்த நகராண்மைக் கழக உறுப்பினர்கள் அவருடைய சம்பளத்தைக் குறைக்க முடியாது என்று முடிவு செய்துள்ளனர். இந்த நிகழ்ச்சி ஜெர்மனியிலே!

ஆனால், நமது 'புனித பாரதத்'தில், நிதி நிலைமை கெட்டுப் போனாலும் பாதகமில்லை என்ற அசட்டை மனப்பான்மையோடு லட்சக்கணக்கான ரூபாய்களை சம்பளம், படி என்ற வகையில் ஆளவந்தார் சுருட்டிக் கொள்கின்றனர் ; சட்டத்திலும் தமக்கு சாதகமாகவே விதிகளை வகுத்துக்கொண்டு அரணமைத்துக் கொள்கின்றனர்.

ஜெர்மனியிலே, உழைப்பைக் கண்ட மக்கள், 'சம்பளத்தைக் குறைக்க மாட்டோம்,' என்று மறுக்கிறார்கள். ஆனால் இங்கு உழைப்பைப் பற்றி பேசவேண்டியதில்லை. கௌரவத்திற்கென்றே பதவிபக்லவா? கவர்னர் செய்யும் வேலை என்ன? எத்தனையோ அரசியல் அமளி இருந்தபோதிலும் சென்னை கவர்னர் ராஜதந்திரமான செயல் என்று சொல்லக்கூடிய ஏதேனும் செய்ததுண்டா, அரசியலில் "ராஜாஜி கேட்" என்று உற்பத்தி செய்ததை தவிர!

கவர்னர் விஷயத்தில் எழுப்பப்படும் இப்பிரச்னை அகில இந்தியாவிலுள்ள கவர்னர்கள் பலரையும் பாதிக்கக்கூடியது என்பதும், டில்லி அரசாங்கத்தை சவாலுக்கு இழுப்பதாகும் என்பதும் மகிழ்ச்சிக்கு உரியன.

ஏ. டி. பிரான்சிஸ்,
பெங்களூர்.

✶

ஐயா,

வடவர்கள் பல்லக்குகளிலே திராவிடத்தின் வளங்களை யெல்லாம் தங்கள் இன்ப வாழ்வுக்கு ஏணியாக்கிக் கொண்டுள்ளனர். முன்னைய கவர்னர் பவநகர் காங்கடைக் கண்காட்சிகளைக் கண்டு களித்தார்—இப்போதைய பிரகாசா சங்கீத சபாக்களுக்குத் தலைமை வகிக்கிறார்! இவர்கள் பவனி வரும் பாதையில் பத்து லட்சம்! அதன் ஓரத்திலே சுருண்டு கிடக்கும் வாழ்வு கிட்டாதோரின் இரத்தத் துளிகள் கொட்டப்பட்டுள்ளன!

தேவையில்லாத கவர்னர் உருவங்களுக்கு ஆண்டுக்கு பத்து லட்சமாகக் குவிக்கப்படும் பணம் பாழ்! பாழ்!! சம்பளத்தைக் குறைக்க வேண்டியதில்லை—கவர்னர் பதவியையே ஒழித்துவிடலாம்! பதவி சுமெட்டாள் டில்லி மிரளும்—அல்ல—மிரண்டுதான் இருக்கிறது—மேலும் அதன் பிடி தளரும்! நம் கொடி உயரும்! தனியரசு மலரும்!

க. கூடலரசன்,
சேலம்.

ஐயா,

அண்ணா அவர்கள் கூறியது போல் 6 மாதத்துக்குள் கவர்னர் சம்பளச் செலவு குறைக்கப்படாவிட்டால் போராட்டம் ஆரம்பிக்க வேண்டிய நிலை ஏற்படும். அதற்கு ஆயிரமாயிரம் இளைஞர் பட்டாளங்கள் தயாராகி வருகிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும். அப்படி நடக்கிற போராட்டத்தில் உயிர்ப்பலி தேவை யென்றால், முதல் பலியாக நானிருக்க முடியுமென்பதை கூறிக்கொள்கிறேன். அந்தப் போராட்டத்தில் சட்டம் உண்டா, இல்லையா என்பது பிரச்சினையாக இருக்காது ; நீதியா அநீதியா என்பதுதான் பிரச்சனையாக யிருக்கும்.

விருதை—நா. இரத்தினசாமி,
சென்னை.

★

ஐயா,

மக்களின் வரிப் பணத்திலிருந்து மாதம் தோறும் சமார் ரூ. 93 ஆயிரம் மாநில கவர்னருக்கு சம்பளமாகக் கொடுப்பது மிக மிக அதிகம். இந்த நாட்டில் ஒரு தொழிலாளி கோழி கூவுகின்ற நேரத்திலே வேலைக்குச் சென்று கோட்டான் கூவுகின்ற நேரத்தில் வீடு திரும்பும் அளவில் சம்பாதிக்கும் பணம் தன் குடும்பத்திற்கு ஒரு வேளைக்கே போதுமானதாயில்லை. ஒருவித வாட்டமுமின்றி இருக்கின்ற இம்மாநில கவர்னருக்கு மாதந்தோறும் இவ்வளவு பெருந்தொகையை அள்ளிக் கொடுப்பது சகிக்க முடியாதது. ஆகவே, சம்பளத்தைக் குறைத்துத் தான் ஆகவேண்டும். இதற்கு ஒரு போராட்டம் அவசியம் தேவை.

22 தோழர்கள்,
சென்னை-18.

★

ஐயா,

வந்தவரை எல்லாம் வரவேற்கும் திராவிடத்தில் மக்கள் வாழ வழி இல்லை ; ஆனால், எங்கிருந்தோ வந்த கவர்னருக்கு ஆண்டிற்கும் பத்து லட்சமா? இந்த அக்கிரமம் கூடாது!

மு. ந. ராசன்,
சேலம்.

★

ஐயா,

அந்நிய ஆட்சி காலத்தில் ஆங்கிலேயக் கவர்னர்களின் சம்பளம் அதிகமென்று கூறி, எங்கள் ஆட்சி காலத்தில் இவ்வளவுக் கொள்ளைச் சம்பளம் பெறமாட்டோம் ; குறைந்த சம்பளம் பெற்று பணி புரிவோம் ; என்று, அன்று கூறி, இன்று நாடாளும் காங்கிரஸ் சர்க்கார் முன்னர் கூறிய மொழியை உணர்ந்து முறையோடு நடந்தால் நல்லது ; இல்லையானால் அறப்போர் அவசியமே!

இளங்கோவன்
சென்னை

★

ஐயா,

கவர்னர் என்ற பெயரால் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய்—அதுவும் நமது நாட்டு வரிப்பணத்திலிருந்து தனி ஒரு நபருக்கு தரப்படுகிறது என்றால், நல்லியலாளர்கள், நாட்டின் மீது—குறிப்பாக திராவிடத்தின் மீது பற்றுடையவர்கள் எவரும் கண்டிக்கத்தான் செய்வர் ; இதற்காக தி. மு. கழகம் "கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் நடத்தியே தீரவேண்டும்.

க. அப்பன்,
மதுரைப்பாக்கம்.

சரித்திரத்தின் பழைய ஏடுகளை புரட்டும் ஏகாதிபத்தியம்!

காலனி வெறியை ஆதரிக்கும் பிரிட்டனின் பொறுப்பற்ற செயல்!

போர்க்காலத்தில் கோவா 'நேட்டோ'வின் தளமாகும் என்ற வீண் நினைப்பு!

டாக்டர் சலாசரை பின்பற்றும் பிரிட்டனைக் கண்டிக்கும் பிரிட்டிஷ் ஏடு!

போர்ச்சுகீசிய இந்தியப் பிரச்சினை பற்றி 'ஸ்டேட்ஸ்மென்' கருத்து

"கோவா நிலைமைகளை அறிய பார்வையாளர்களை அனுப்ப இந்தியா ஒப்புக்கொண்டிருப்பது மிகவும் அறிவுக்குப் பொருத்தமான பெருந்தன்மையான செயலாகும்; போர்ச்சுகல் தனது காலனியில் கொந்தளிப்பை உண்டாக்கி துன்புறப்போகிறதே என்பதுபற்றி சிந்தனையாளர்களும், நல்லவர்களும் கவலைப்படவில்லை; ஆனால், போர்ச்சுகீசிய சர்வாதிகாரி, காலத்திற்கு ஒவ்வாது என்று ஒதுக்கப்பட்ட நடவடிக்கைகளையும், மதியீனப் போக்கையும் கொண்டிருக்கும் நிலை, எத்தனையோ நல்ல பத்திரிகைகளைக்கொண்ட பிரிட்டன், இந்தியக் காலனிகள் பற்றிய பிரச்சினையில், டாக்டர் சலாசரைத் தூண்டிவிட்டு அப்பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் தன்மை ஆகியவைகளைக் கண்டுதான் நல்லெண்ணம் கொண்டோர் வருந்துகிறார்கள்."

—என்று, பிரிட்டனின் இடதுசாரி சோஷலிஸ்டு இதழான 'ஸ்டேட்ஸ்மென்' கூறுகிறது. காலனிக் கொள்கையை ஆதரித்து பிரிட்டன் போர்ச்சுகலுக்கு வக்காலத்து வாங்கும் போக்கினைக் கண்டித்து அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"பூகோள, பொருளாதாரத் துறைகளில் இந்தியாவின் சூழ்நிலைக்கு ஏற்ப விளங்கும் இந்தியப் பகுதிகளில் உள்ள மக்கள் அன்னிய ஆதிக்கத்தை வெறுக்கிறார்கள். இந்நிலையில் போர்ச்சுகல் தனது இந்தியப் பகுதிகள் பற்றிய பிரச்சினைகளை அணுகும் போக்கு, பழைய காலனி கொள்கையேயன்றி வேறெதுவும் இல்லை. போர்ச்சுகலில் இருப்பதைவிட இந்தியாவில் ஜனநாயக வளர்ச்சி அதிகம் காணப்படுகிறது என்ற உண்மையை எண்ணிப்பார்க்கையில், போர்ச்சுகீசியர்களின் போக்கிற்கு தக்க ஆதாரங்கள் கிடையாது.

போருக்குப் பிறகு இந்தியாவைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தியுள்ள பிரிட்டன், சரித்திரகாலத்தின் பழைய நிலைக்குத் திரும்பும் போர்ச்சுகல்லின் செய்கையை எப்படி ஆதரிக்க முன்வந்தது, டில்லிக்கு குறிப்பொன்றை அனுப்பியது என்பது விளங்கவில்லை."

சென்ற பதினைந்து நாட்களில் பிரிட்டன் புதியதோர் காலனிக் கொள்கை ஒன்றை தனக்கென வகுத்துக் கொண்டிருக்கிறது என்று கூறுவதுதவிர இக்கேள்விக்கு வேறு என்ன பதிலாக இருக்க முடியும் என்று அப்பத்திரிகை கேட்கிறது.

"சைப்ரசைப் பொறுத்தமட்டில் நாம் அங்குள்ள மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை மறுக்கிறோம்; ஆகவே, சைப்ரசைப் பொறுத்தமட்டில் பலவீனமான கொள்கையைக் கடைபிடிக்கும் பிரிட்டனின் போக்குதான், லெனினோ மாளிகை, குறுகிய நோக்குடன் டாக்டர் சலாசரை ஆதரிக்குமாறு செய்யத் தூண்டியதற்கு காரணம் என்று கூறலாம்.

ஆனால், பிரிட்டன் போர்ச்சுகலை ஆதரிப்பது இதுவே முழு காரணமல்ல!

'நேட்டோ' பற்றிப் பேசுகையில், டாக்டர் சலாசர், 'ஆசியாவில் உள்ள இச்சிறு பகுதிகள், நெருக்கடியான காலங்களில் 'நேட்டோ' நாடுகளுக்கு அரும்புகள், போர்க் கருவிகளை வைத்துக்கொள்ள உதவும்,' என்று குறிப்பிட்டார்.

இதற்கு ஒப்பாக, இங்கோசீனப் போருக்கு புதுச்சேரி போன்ற பகுதிகளையும், பாகிஸ்தான் விமான நிலையங்களையும், பிரான்ஸ் பயன்படுத்திக்கொண்டது என்று கூறலாம்.

டாக்டர் சலாசர் தனது இந்த வாதத்தைத் 'துருப்பாக' வைத்து விளையாடுகிறார். அவரது இந்த வாதத்திற்கு பிரிட்டன், அமெரிக்கா, மற்றும் இதர 'நேட்டோ' நாடுகள் முன்கூட்டியே ஊக்கமளித்தனவோ என்னவோ, ஆனால் டாக்டர் சலாசரின் இந்த வாதம் 'நேட்டோ' நாடுகளின் அனுதாபத்திற்கும், ஒப்புதலுக்கும் உரியதாக இருக்கிறது.

கோவாவில் உள்ள கப்பல் விமான தளவசதிகள் உண்மை உணர்ந்து, பல விபரங்களை அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டிய பிரிட்டன் போன்ற நாடுகளிலும் டாக்டர் சலாசர்: ஆதரவு பெறும் நிலைமை ஏற்படக் காரணமாயிற்று எனலாம்.

விடுதலை வீரர்களின் வெற்றி நடை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1954 டிசம்பருக்குள், கோவா விடுதலை பெறுமென்றும், பொங்காயில் தலைமைக் காரியாலயம் இருக்குமென்றும், தனது போர்த் திட்டத்தை போர்ச்சுக்கல் சர்க்காருக்கு விவரிக்கவும் போவதில்லை என்றும் கூறினர்.

கோட்டை பிடிபட்டது

சௌராஷ்டிரா விலுள்ள போர்ச்சுகீசிய பிரதேசத்தில் சிமார் என்ற கிராமத்தருகே உள்ள சிமார் கோட்டையை நேற்றிரவு டையூ விடுதலைக் கமிட்டியினர் பிடித்துக்கொண்டதாக செய்தி கிடைத்திருக்கிறது.

நேரு எச்சரிக்கை

"உலகத்தில் உள்ள நாடுகளுக்கெல்லாம் கோவா பிரச்சினை ஒரு சோதனை! ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது ஆட்சி செலுத்தலாம் என்ற பழைய எண்ணம் இனி யாருக்காவது இருக்குமானால், அவர்கள், தங்கள் காலனி ஆட்சியை காப்பாற்றும் முயற்சியில் நிச்சயம் தடுமாறி விழுவார்கள்."

'கோவா விடுவிக்கப்படும்; சுதந்திர இந்தியாவுடன் இணைக்கப்படும்!"

என்று பண்டித நேரு செங்கோட்டையில் பேசியபோது குறிப்பிட்டார்.

★

இந்திய எல்லையில் 1,257 பேர் கைது

நேருவின் மிருக்கு பதில் கிடைக்கும் வரையில் டாமன் செல்லும் பாதையில் உட்கார்ந்திருந்த பிரஜா - சோஷலிஸ்டு கட்சியினரான நல்வாலையும், அவருடன் சென்ற 1257 தொண்டர்களையும், இந்திய போலீசார் கைது செய்து பின்னர் விடுதலை செய்தனர்.

இவர்கள் அனைவரும் டாமனுக்குள் நுழையாமல் இந்திய போலீசாரால் தடுக்கப்பட்டவே, சாலையின் ஓரமாக உட்கார்ந்திருந்தனர்.

தோழர் நல்வாலா, டாமன் எல்லையில் நுழைய அனுமதிக்குமாறு பண்டித நேருவிற்கு தந்தி ஒன்று அனுப்பினார்.

லண்டனில் ஆதரவுக் கூட்டம்

போர்ச்சுகல் பிரதமர் டாக்டர் சலாசரின் பாசிசப் போக்கை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு லண்டனில் நடைபெற்ற பொதுக்கூட்டம், தனது பாராட்டுதலையும் ஆதரவையும் தந்திருக்கிறது.

அக்கூட்டத்தில் பேசிய தொழிற்கட்சி எம். பி-யான பென்னர் பிராக்வே 'கோவா பிரச்சினை, காலனி ஆதிக்கம் நீடிப்பதா கூடாதா என்பதே என்றும், வரிதயத்திற்குரிய நிக்ரோ சிப்பாய்கள் ஏகாதிபத்தியத்திற்கும் பயன்படுத்தப் படுகிறார்களென்றும், காலனி மக்களை எதிர்க்க, காலனி மக்களை 'வெடி மருந்து'களாகப் பயன்படுகின்ற அநாகரிக ஏகாதிபத்தியப் போக்கு மிகவும் கண்டிக்கத்தக்கது" என்றும் கூறினார்.

90 பேர் கைது

இந்நகரையில் போர்ச்சுகலுக்கு எதிராக இந்தியக் கொடிகளை ஏற்றி கோவா எல்லையில் ஆர்ப்பாட்டம் செய்த 90 பேர் கைது செய்யப்பட்டனர் என்று போர்ச்சுகீசிய அதிகாரிகள் கூறினர்.

விடுதலைப் படையினரின் ஆர்ப்பாட்டங்களால் அசம்பாவிதமான சம்பவம் எதும் நிகழவில்லை என்று சர்க்கார் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

பத்திரிகாசிரியர்களுக்கு சுதந்திர உணர்வு வேண்டும்

அறிவு விலைக்கு வாங்கப்படக் கூடாது

அ. இ. பத்திரிகாசிரியர் மாநாட்டில் மணி பேச்சு

"கற்றறிந்த பத்திரிகையாளர்கள், காசுக்காக விலைக்கு வாங்கப்படும் நிலைமை மாறி பத்திரிகை ஆசிரியர்களுக்கு, ஒரு பத்திரிகையின் சகல அம்சங்களும் எப்படி இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கிற சுதந்திரம் இருக்கவேண்டும், இந்த சுதந்திரம் எப்படி வளர்க்கப்பட முடியும் என்பதற்கான வழிகளை மட்டும் பத்திரிகை விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ளது; ஆனால், இந்த சுதந்திர உணர்வு பத்திரிகை ஆசிரியர்களிடமே முதலில் இருக்கவேண்டும்."

என்று, அகில இந்திய பத்திரிகையாளரின் 11-வது வருடாந்திர மாநாட்டின் தலைவரான தோழர் ஓ. டி. மணி, தலைமை உரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

அவர் மேலும் பத்திரிகை விசாரணைக் குழு சிபார்சு செய்திருக்கிற பத்திரிகைக் 'கவுன்சில்' நல்ல பல வேலைகளைச் செய்ய உதவக் கூடுமெனவும் இந்தக் 'கவுன்சிலை' தங்கள்மீது திணிக்கப்படும் தண்டனை எனக் கருதாது தங்களின் தேவைக்காக நியமிக்கப்படும் ஒன்றாகவே பத்திரிகாசிரியர்கள் நினைக்கவேண்டுமெனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் அவர் பத்திரிகாசிரியர்களுக்கு தரப்படவேண்டிய சம்பள விகிதங்கள் குறித்தும் அது பற்றிய விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் பற்றியும் இன்னபிற குறித்தும் பேசினார்.

கம்யூனிஸ்டு கட்சிக்குத் தடை!

அமெரிக்க மேல் சபையான செனட் சபை அமெரிக்காவில் கம்யூனிஸ்டு கட்சியைத் தடை செய்யும் மசோதா ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. இந்த மசோதா இப்பொழுது பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சியில் சேர்ந்து, அக்கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவியாய் இருப்பவர்களுக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனையும், பத்தாயிரம் டாலர் அபராதமும் விதிக்கப்படலாம் என்று மசோதா கூறுகிறது.

திருக்குறள் வகுப்பு

சென்னை, மேத்தா நாய்க்கன் பேட்டை தாய்மார் கழகத்தின் சார்பில் 17—8—54 செவ்வாய் அன்று திருக்குறள் வகுப்பு நடைபெறும். புலவர் மயிலை சிவமுத்து சொற்பொழிவாற்றுவார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

21, 22—8—1954-ந் தேதிகளில், காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெறும்

21—8—54 சனிக்கிழமை:	22—8—54 ஞாயிற்றுக்கிழமை:
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்: கவிவாணர் என். எஸ். கிருஷ்ணன்	தலைவர்: இரா. சு. தங்கப்பழம்
துவக்குபவர்: எம். ஜி. ராமச்சந்திரன்	துவக்குபவர்: எம். எஸ். மணி

பொதுச்செயலாளர் அண்ணாதுரையும்—எல்லா கழகத் தோழர்களும் கலந்துகொள்வர்

சனி இரவு:	ஞாயிறு இரவு:
'அம்மையப்பன்' ★	'சந்திரமோகன்'

எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். ஆர். சாமிநாதன், எம் என். கிருஷ்ணன் தேட்சணாமூர்த்தி, ஜி சகுந்தலா முதலியோர் நடிக்கும் நாடகங்கள் நடைபெறும்.

கட்டணம்:—வ. குழு ரூ 5; பிரதிநிதி ரூ. 3; ஆதரவாளர் ரூ. 2; பார்வையாளர் ரூ 1. பெண்களுக்கு அணா 8.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

[illegible] அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.